කර්මාන්ත හා වාණිජ කටයුතු අමාත්‍යාංශය
கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு
Ministry Of Industry and Commerce

# 2016

# කාර්ය සාධන වාර්තාව
# செயலாற்றல் அறிக்கை
# PERFORMANCE REPORT

සමුපකාර සංවර්ධන දෙපාර්තමේන්තුව
கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்
Department of Cooperative Development

# செயலாற்று அறிக்கை
# 2016

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு
கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை

# முகவுரை

கூட்டுறவு நன்நெறி மற்றும் நல் ஒழுக்கத்திற்கு அமைய உருவாக்கப்பட்டுள்ளதும் கூட்டுறவு அமைப்புக்களுக்கே உரித்தான தனித்துவதன்மையின் காரணமாக கூட்டுறவு இயக்கம் இந்நாட்டு மக்களின் வாழ்க்கையுடன் பிரிக்கமுடியாத நிலையில் இணைந்து காணப்படுகின்றது. இந்நாட்டின் கூட்டுறவுத்துறையானது போட்டித்தன்மையான சந்தைபொருளாதார சூழலில் தமது உறுப்பினர்களின் பொருளாதார காலாச்சார தேவைப்பாடுகளை திருப்திப்படுத்தும் பொருட்டு அங்கத்தவர்கள் எதிர் கொள்கின்ற சவால்களை வெற்றி கொள்ளும் நோக்குடன் அரசுடன் இணைந்து பொதுமக்களின் நலனோம்பும் செயற்பாடுகளுக்கு பங்களிப்பு வழங்கி வருகின்றது.

தற்போது உலகளாவிய ரீதியில் நிலையான அபிவிருத்தி என்ற எண்ணக்கருவுக்கு கூடிய முக்கியத்துவம் செலுத்தப்பட்டு வருகின்றது கூட்டுறவு துறையுடன் பின்னிப்பிணைந்து காணப்படும் சமூகபொறுப்புடன் கூடிய நன்நடத்தை ஒழுக்கம் மற்றும் கூட்டுறவு கொள்கைகள் என்பவற்றை கவனத்தில் கொண்டு மேற்படி நிலையான அபிவிருத்தி என்னும் இலக்கை அடைந்து கொள்ள கூட்டுறவு வர்த்தகமுறைமை மிகப்பொருத்தமான ஒன்றாக பெரும்பாலனவர்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மக்களின் முயற்சியாண்மையாக நிலையான அபிவிருத்திக்கு கூட்டுறவு என்னும் குறிக்கோளுடன் தேசிய மட்டத்திலான கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் கூட்டுறவு அமைப்புக்கள் மற்றும் கூட்டுறவு சமூகத்துடன் ஒன்றிணைந்து தேசிய ரீதியில் நிலையான அபிவிருத்தி என்னும் இலக்கை அடையும் பொருட்டு பரந்த அளவில் ஒத்துழைப்பை வழங்கிவருகின்றது.

தேசிய மட்டத்திலான கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக மாகாண மட்டத்தில் காணப்படுகின்ற கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களங்களின் விடயப்பரப்புக்கு அப்பாற்பட்ட புடையான மட்டத்திலான கூட்டுறவு அமைப்புக்கள் மற்றும் நாடளாவிய ரீதியிலான ஆரம்ப கூட்டுறவு சங்கங்களுக்கான வழிகாட்டல்கள் கண்காணிப்பு நடவடிக்கைகள் மற்றும் கணக்காய்வுச் செற்பாடுகளை மேற் கொள்வதுடன் மாகாண மட்டத்தில் காணப்படுகின்ற கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களங்களின் விடயப்பரப்புக்கு அப்பாற்பட்ட மேற்படி கூட்டுறவுச் சங்கங்களை பதிவு செய்வதுடன் இந்நாட்டின் கூட்டுறவுத்துறை தொடர்பான உண்மையான நிலையை தெளிவுபடுத்தும் வகையில் தேசிய மட்டத்திலான கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களமானது மாகாண மட்டத்திலான கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களங்களுடன் இணைந்து வருடாந்த புள்ளிவிபரவியல் அறிக்கை தயாரித்தல், கிராமிய வங்கி ஒழுங்குபடுத்தலை மேற் கொள்ளுதல், தேசிய ரீதியில் முக்கியத்துவம் மிக்க கருத்திட்டங்களை செயற்படுத்தல் என்பன கூட்டுறவுதுறையின் அபிவிருத்திக்காக மேற் கொண்ட செயற்பாடுகள் சிலவாகும்

2016 ஆம் அண்டுக்கான செயலாற்றுகை அறிக்கையாக வெளியிடப்படும் இவ் வெளியீட்டின் ஊடாக கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம் குறித்த ஆண்டில் நிறைவேற்றப்பட்ட கடமைப் பொறுப்புக்கள் மற்றும் அதற்காக பயன்படுத்திய வளங்கள் தொடர்பான விரிவான அறிக்கைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் புடையான மட்டத்திலான கூட்டுறவு அமைப்புக்கள் மற்றும் நாடளாவிய ரீதியிலான ஆரம்ப கூட்டுறவு அமைப்புக்கள் தொடர்பாக அடிப்படை தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையிலும் உலகளாவிய ரீதியிலும் பிரஜைகளின் நிலையான அபிவிருத்தி எதிர்பார்ப்புக்களை நனவாக்கும் வலுவையும் உறுதிப்பாட்டையும் அதற்கான சந்தர்ப்பமும் சகல கூட்டுறவாளர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

எஸ் .எல் நஸிர்  
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்  
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்

## நோக்கு

மக்களின் முயற்சியாண்மையாக நிலையான அபிவிருத்திக்கு கூட்டுறவு

## செயற்பணி

இலங்கையின் கூட்டுறவுத்துறையை மக்களின் முயற்சியாண்மையாக அபிவிருத்தி செய்வதற்காக ஒத்துழைப்பை நல்கி கூட்டுறவுச் சங்கங்களின் சிறந்த நிர்வாகத்தை கட்டியெழுப்புவதற்காக பரந்த அளவில் ஒத்துழைப்பை வழங்குதல்.

# உள்ளடக்கம்

1. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் செயற்பாடுகளும் கட்டமைப்பும்
- 1.1. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் செயற்பாடுகள்.
- 1.2. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கட்டமைப்பு
- 1.3. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் பொதுவான நிருவாகம்
  - 1.3.1. ஊழியர்கள் குழுவின் எண்ணிக்கையும் வெற்றிடங்களும்
  - 1.3.2. புதிய நியமனங்கள் பெற்று வந்த உத்தியோகத்தர்கள்.
  - 1.3.3. இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்கள்
  - 1.3.4. ஊழியர்கள் குழுவின் ஒய்வு பெற்றவர்கள்.
  - 1.3.5. இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள்

- 1.4. ஊழியர்கள் குழுவைப் பயிற்சியளித்தலும் அபிவிருத்தியும்
  - 1.4.1. உள்நாட்டு பயிற்சி
  - 1.4.2. வெளிநாட்டு பயிற்சி
  - 1.4.3. மக்கள் வங்கியின் உதவியுடன் நிகழ்த்தப்பட்ட பயிற்சிப் பட்டறைகள் வேலைத் திட்டங்கள்

2. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் அபிவிருத்தித் செயற்பாடுகள்
- 2.1. 2016 ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள்
- 2.2. கூட்டுறவுச் சங்கங்களின் துணை விதி திருத்தம்
- 2.3. செயற்பாடற்ற சங்கங்களின் முடிவுறுத்தல்
- 2.4. கூட்டுறவு சங்கங்களினதும் சம்மேளனங்களினதும் தேர்தல்களை நடாத்துதல்
- 2.5. கூட்டுறவுச் சங்கங்களில் சட்ட ரீதியான கணக்காய்வு
- 2.6. சட்ட நடவடிக்கைகள்
  - 2.6.1. கூட்டுறவு சங்கங்களினதும் சம்மேளனங்களினதும் பிணக்குகளை தீர்த்துவைத்தல்
  - 2.6.2. நடுத்தீர்ப்பை நீதிமன்றத்தின் மூலம் வலுப்பெற செய்தல்.
  - 2.6.3. இந்த ஆண்டு நிறைவு செய்த வழக்குகள்

- 2.7. நிதிய முகாமைத்துவம்
  - 2.7.1. கூட்டுறவு நிதியம்
  - 2.7.2. கூட்டுறவு மேலதிக நிதியம்

- 2.8. 2016 ம் ஆண்டுக்கான அரசின் வரவு செலவு திட்டத்தின் மூலம் ஒதுக்கிய நிதி மற்றும் செலவினம் தொடர்பான அறிக்கை
- 2.9. கிராமிய வங்கி ஒழுங்குபடுத்தல்
- 2.10. கருத்திட்டங்களை செயற்படுத்தல்
- 2.11. திட்டமிடல் நடவடிக்கைகள்
- 2.12. ஊடகச் செயற்பாடுகள்

3. தேசிய ரீதியான கூட்டுறவு அமைப்புக்கள்
- 3.1. குறித்த வருடத்தில் செயற்பாடுடையதாக காணப்பட்ட கூட்டுறவுச சம்மேளனங்கள்
- 3.2 குறித்த வருடத்தில் செயற்பாடுடையதாக நாடளாவிய ரீதியான ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்கள்
  - 3.2.1. நாடளாவிய ரீதியிலான நிதி சேவையை வழங்குகின்ற சங்கங்கள்
  - 3.2.2. நாடளாவிய ரீதியிலான உற்பத்தி மற்றும் ஏனைய சேவைகள் வழங்குகின்ற சங்கங்கள்

# அத்தியாயம் 01

## கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

இலங்கையின் வறியமக்களுக்கு உதவும் பொருட்டு உருவாக்கப்பட்ட கூட்டுறவுத்துறையை நெறிப்படுத்தி நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்துவதை நோக்காக கொண்ட கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களமானது 1930 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 01ம் திகதி கூட்டுறவு திணைக்களம் என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் இத்திணைக்களமானது 1945 ஆண்டு கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களமாக பெயர் மாற்றம் பெற்றது. தற்போது கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் இயங்கி வரும் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களமானது இல.330 யூனியன் பிளேஸ் கொழுப்பு 02 செயற்பட்டு வருவதுடன் இலங்கையின் கூட்டுறவு வியாபாரம் மக்களின் வியாபாரமாக அபிவிருத்தி செய்வதற்காகவும் கூட்டுறவுச் சங்கங்களின் சிறந்த நிர்வாகத்தை கட்டியெழுப்புவதற்காகவும் பரந்த அளவில் ஒத்துழைப்பை வழங்கி அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது.

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் செயற்பாடுகள்

- ❖ மாகாணங்களுக்கு இடையோயான மற்றும் அகில இலங்கை ரீதியான கூட்டுறவு சங்கங்கள், ஒன்றியங்கள் மற்றும் மூன்றாம் நிலை கூட்டுறவு அமைப்புகளையும் பதிவு செய்தல்
- ❖ பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கங்கள் சம்மேளனங்கள் மற்றும் மூன்றாம் நிலை கூட்டுறவு நிறுவனங்களில் சட்டரீதியான செயற்பாடுகளை மேற்கொள்ளுதல், அவற்றின் அபிவிருத்திக்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- ❖ மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களங்களுடன் தொடர்பு கொண்டு தேசிய கொள்கைக்கு அமைவாக கூட்டுறவு அமைப்பின் நடவடிக்கைகளை இயக்குதல் / செயற்படுத்தல்
- ❖ தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நடவடிக்கைக்கு பங்களிப்புச் செய்தல்
- ❖ அரசின் கொள்கையை செயற்படுத்துவதன் ஊடாக அபிவிருத்திக்கான ஒத்துழைப்பை நல்குதல்.

கூட்டுறவு சங்கங்களின் சட்டரீதியான செயற்பாடுகள்

- ❖ கூட்டுறவு அமைப்புகளை பதிவு செய்தல்
- ❖ ஒன்றிணைத்தல் மற்றும் வேறாக்குதல்
- ❖ அங்கத்துவம் தொடர்பான செயற்பாடுகள்
- ❖ துணைவிதியை மற்றும் துணை விதி திருத்தத்தை அங்கீகரித்தல்
- ❖ தேர்தல் செயற்பாடுகளை கண்காணித்தல்
- ❖ பொது சபையைக் கூட்டுதல்/முகாமைத்துவ சபையை கூட்டுதல்/அதன் சட்டரீதியான தன்மையை தீர்மானித்தல்
- ❖ பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு அமைப்பைக் குலைத்தல் அல்லது முடிவுறுத்தல்.
- ❖ பிணக்குகளை தீர்த்தல் தொடர்பான செயற்பாடுகள் மற்றும் நீதி மன்றத்தின் மூலம் தீர்ப்பை வலுப்பெறச் செய்தல்
- ❖ கூட்டுறவு சங்கம்/ சம்மேளனங்களின் வருடாந்த கணக்காய்வுச் செயற்பாட்டை மேற்கொள்ளுதல்.

முகாமைத்துவத்துடன் தொடர்பான செயற்பாடுகள்

- ❖ நிர்வாக சபையினரை நியமித்தல் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களை நியமித்தல்
- ❖ கணக்கியல் செயற்பாடுகள் தொடர்பான மேற்பார்வை செய்தல்
- ❖ கணக்காய்வு செயற்பாடுகள்
- ❖ சட்டத்தின் விடய விதானத்திற்கு உட்பட்டு சாதாரண மற்றும் விசேட பரிசீலிப்புகள் மற்றும் சோதனை செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்
- ❖ முகாமைத்துவ கல்வி சம்பந்தமான மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல்

## தொடர்பாடல் செயற்பாடுகள்

- ❖ கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பை ஏற்படுத்தல்
- ❖ மாகாண கூட்டுறவு அமைச்சர்கள், அமைச்சின் செயலாளர்கள் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவு சங்க பதிவாளர்களுடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்த கைத்தொழில் மற்றும் வணிக வர்த்தக அமைச்சுக்கு ஒத்துழைப்பை வழங்குதல்
- ❖ சர்வதேச கூட்டுறவு அமைப்புகள் மற்றும் கூட்டுறவு விடயத்துடன் தொடர்புடைய வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதல்
- ❖ கூட்டுறவு கிராமிய வங்கி மற்றும் கூட்டுறவு நிதி அமைப்புக்கள் தொடர்பாக இலங்கை மத்திய வங்கியுடனான ஒருங்கிணைப்பு
- ❖ கூட்டுறவு சங்கங்களிற் குரிய புள்ளிவிபரம் தொடர்பாக இலங்கை மத்திய வங்கியுடனும் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்துடனான ஒருங்கிணைப்பு
- ❖ நெல் விதையை கொள்வனவு செய்தல் சலுகை விலையில் உரத்தை பகிர்ந்தளித்தல் போன்ற நடவடிககைகளில் கூட்டுறவு சங்கங்கள், கமத்தொழில் விடயப் பொறுப்பு அமைச்சு விதை நெல் கொள்வனவு செய்வதற்குரிய விடயப் பொறுப்பு அமைச்சுடனான ஒருங்கிணைப்பு
- ❖ கூட்டுறவு சங்கங்கள் சம்மேளனங்களிற் கிடையிலான ஒருங்கிணைப்பு

## அபிவிருத்தி நடவடிக்கைகள்

- ❖ வருடாந்த வரவு செலவு வேறாக்கத்திற்கு அமைவாக தேசிய மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- ❖ கூட்டுறவு சங்கங்களினதும் சம்மேளனங்களினதும் நன்நடத்தைக்கான ஒழுக்க விழுமியங்களை எற்படுத்துவதற்கான நடவடிக்கைகனை மேற்பார்வை செய்தல்.
- ❖ கூட்டுறவு சங்கங்களின் மற்றும் சம்மேளனங்களின் அபிவிருத்திக்காக அபிவிருத்தி சார் ஆலோசனை சேவைகளை வழங்குதல்
- ❖ கூட்டுறவு சங்கங்களின் மற்றும் சம்மேளனங்களின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளை கண்காணித்தல்
- ❖ அபிவிருத்தித் கருத்திட்டங்களை செயற்படுத்துதல்.
- ❖ அபிவிருத்திக்கான உதவி மற்றும் ஒத்துழைப்பை நல்குதல்.
- ❖ அபிவிருத்திக்கு வழிகாட்டுதல் மற்றும் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தல்
- ❖ கூட்டுறவுத் துறையிலும் திணைக்களத்திலும் மனித வளத்தை அபிவிருத்தி ஏற்படுத்தல்
- ❖ ஊழியர்களினதும் உத்தியோகத்தினரினதும் நலன்புரி. நடவடிக்கைகள்

## நிதிய பரிபாலனம்

- ❖ திணைக்களத்தின் கீழுள்ள கூட்டுறவு நிதியம் மற்றும் மிகை நிதிய முகாமைத்துவமும். மற்றும் பரி-பாலனம்
- ❖ கூட்டுறவு சங்கங்களின் வருடந்த கணக்காய்வின் பின்னர் நிதியத்திற்கான பங்களிப்புத் தொகையை அறவிட்டுக் கொள்ளுதல்
- ❖ கூட்டுறவுச் சங்கங்களின் அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் பயிற்சி செயற்பாடு தொடர்பாக கடன் மற்றும் நன்கொடை வழங்குதல்.
- ❖ கூட்டுறவு சங்கங்களிற்கான கடன் வழங்கல் மற்றும் கடனை மீள அறவிட்டுக் கொள்ளுதல்.
- ❖ வினைத்திறன் மிக்க முதலீடுகளில் நிதியத்தின் பணத்தை முதலீடு செய்தல்.

## உள்ளக நிருவாக பரிபாலனம் மற்றும் முகாமைத்துவ நடவடிக்கை


- ❖ திணைக்களத்தின் சாதாரண நிருவாகம் / பரிபாலனம்
- ❖ திணைக்களத்தின் மனித வள முகமைத்துவம்.
- ❖ திணைக்களத்தின் செயற்திறன் வளர்ச்சி
- ❖ திணைக்களத்தின் சொத்துக்களின் முகாமைத்துவம்.

## 1.2 கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கட்டமைப்பு

2016 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் செய்ற்பாடுகள் 09 பிரிவகளாக ஒருங்கிணைந்து செயற்பாடுகின்றது.

1. நிருவாகம் / பரிபாலன பிரிவு.
2. நிதிப் பிரிவு
3. அபிவிருத்திப் பிரிவு
4. கணக்காய்வுப் பிரிவு.
5. சட்டப் பிரிவு
6. நிதியப் பிரிவு
7. வங்கி ஒழுங்குபடுத்தல் பிரிவு
8. கருத்திட்டப் பிரிவு
9. திட்டமிடல் பிரிவு

# 1.3 கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கட்டமைப்பு வரைபடம்



இந்த வருடத்தில் எமது திணைக்களத்தில் பரிபாலன கட்டமைப்பில் அல்லது வியுகத்தில் ஏற்படுத்தப்பட்ட சில குறிப்பிடத்தக்க நிகழ்வுகள்.

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதி ஆணையாளராக (பதில் கடமை) பதவி வகித்த இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு 111 ஐ சேர்ந்த திருமதி எச் சுரம்யா பொன்சேகா அவர்கள் 2016.01.26 திகதியில் இருந்து இடம்மாற்றம் பெற்றுச் சென்ற பின்னர் அவரின் மேற்படி பிரதி ஆணையாளர் பதவிக்கு இலங்கை நிருவாக சேவையை சேர்ந்த திருமதி என் டபிள்யு. டயஸ் அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தாலும் அவர் இதே ஆண்டு காலப்பகுதியில் மீண்டும் இடம்மாற்றம் பெற்று சென்றுவிட்டார். இதனால் மேற்படி பிரதி ஆணையாளர் பதவியானது தொடர்ந்து வெற்றிடமாக காணப்படுகின்றது. இதே போல் இத்திணைக்களத்தில் பல வருடங்களாக கணக்களராக சேவையாற்றி வந்த திருமதி பி.கே.எம்.ஜே ரெட்ரிகோ அவர்கள் பதவியுயர்வு பெற்று சென்றதன் பின்னர் அவரின் பதவிக்கு திரு.ஈ.எம்.ஏன்.ஆர்.பண்டார அவர்கள் 2016.12.08 திகதி முதல் நியமிக்கப்பட்டார். கடந்த பல வருடங்களாக வெற்றிடமாகா காணப்பட்ட நிருவாக உத்தியோகத்தர் பதவிக்கு திருமதி லலிதா பஸ்நாயக்க அவர்கள் நியமனம் பெற்று வந்ததும் இந்த வருடத்தில் நடைபெற்ற குறிப்பிடத்தக்க நிகழ்வுகளாகும்.

மேலும் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை வகுப்பு 111க்கு புதிய நியமனம் பெற்று வந்த சிலரும் எமது திணைக்கள ஆளணியுடன் இணைந்து கொண்டனர். இதேபோல் அரச முகாமைத்துவ உதவியாளர்கள் சிலரும் சாரதிகள் சிலரும் அலுவலக உதவியாளர்கள் சிலரும் இடம்மாற்றம் பெற்று எமது திணைக்கத்திற்க்கு வருகை தந்தனர் இவை இவ்வாண்டில் நடைபெற்ற மாற்றங்களாகும்.

### 1.3.1 ஊழியர்கள் குழுவின் எண்ணிக்கையும் வெற்றிடங்களும்

இத்திணைக்களத்தின் அனுமதிக்கப்பட்ட பதவி நிலைகளும் அத்தகைய பதவிகளில் 2016.12.31 ம் திகதியில் சேவையாற்றியவர்களின் எண்ணிக்கையும் வெற்றிடங்களும் பின்வருமாறு அமைந்திருந்தது

| தொடர் இலக்கம் | பதவிகள் | | அனுமதிக்கப்பட்ட தற்போதைய பதவிகளின் எண்ணிக்கை | 2016.12.31ம் திகதியில் கடமையில் ஈடுபட்டோரின் எண்ணிக்கை | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|---|
| 01 | சிரேஷ்ட மட்டம் | கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவு சங்கப் பதிவாளர் இலங்கை நிருவாக சேவை தரம் 1 | 01 | 01 (பதில் கடமை) | 00 |
| 02 | | உதவி ஆணையாளர் / பிரதி ஆணையாளர் இலங்கை நிருவாக சேவை தரம் II/III) | 04 | 01 | 03 |
| 03 | | கணக்காளர் இலங்கை கணக்காளர் சேவை தரம் 11/111 | 01 | 01 | 00 |
| 04 | | உதவி ஆணையாளர் / பிரதி ஆணையாளர் (திணைக்களம்) | 03 | 01 | 02 |
| | | **உப மொத்தம்** | **09** | **04** | **05** |
| 05 | புடையான மட்டம் | நிருவாக அதிகாரி | 01 | 01 | 00 |
| 06 | | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் அதி விசேட வகுப்பு | 05 | 05 | 00 |
| 07 | | மொழி பெயர்பாளர் | 01 | - | 01 |
| | | உப மொத்தம் | **07** | **06** | **01** |
| 08 | துணை யான மட்டம் | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் 1ம் 2ம் வகுப்புகள் | 62 (08–10) | 02 | 16 (08–10) |
| 09 | | கூட்டுறவு மேம்பாட்டு ஆய்வு உதவியாளா | | 24 } 46 | |
| 10 | | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் | | 20 | |
| 11 | | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 15 | 09 | 06 |
| 12 | | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை | 28 | 23 | 05 |
| | | உப மொத்தம் | **105** | **78** | **27** |
| 13 | ஆரம்ப மட்டம் | ஓட்டுனர் சேவை | 05 | 05 | 00 |
| 14 | | திணைக்கள உதவியாளர் சேவை | 15 | 07 | 08 |
| உப மொத்தம் | | | **20** | **12** | **08** |
| மொத்தம் | | | **141** | **100** | **41** |

### 1.3.2 புதிய பதவிகளை பெற்று வந்த உத்தியோகத்தர்கள்

| இல | பெயர் | பதவி | நியமனத் திகதி |
|---|---|---|---|
| 01 | திரு.எஸ்.எ.மீமனகே | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை 111 | 2016.03.01 |
| 02 | திருமதி.ஈ.எம். பட்டகம | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை 111 | 2016.03.01 |
| 03 | திரு.ஆர்.ஏ.ஆர்.ஆர்.குமார | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை 111 | 2016.03.01 |
| 04 | திருமதி.கே.பீ.எஸ்.உபமாலிகா | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை 111 | 2016.03.01 |
| 05 | திருமதி.டி.எம்.எ.எல். திசாநாயக்க | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை 111 | 2016.07.04 |
| 06 | திருமதி.ஆர்.எம்.பி.ஹன்சனி | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை 111 | 2016.07.04 |

### 1.3.3 இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்கள்

| இல | பெயர் | பதவி | இடமாற்றம் பெற்று வந்த திகதி |
|---|---|---|---|
| 1 | திருமதி.என்.டபிள்யு.டயஸ் | பிரதி ஆணையாளர் | 2016.07.26 |
| 2 | திரு.ஈ.எம்.என்.ஆர்.பண்டார | கணக்காளர் | 2016.12.08 |
| 3 | திருமதி.லலிதா பஸ்நாயக்க | நிருவாக அதிகாரி | 2016.09.05 |
| 4 | திருமதி.எ.எ.புஸ்பா ரஞ்சனி | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை 1 | 2016.08.01 |
| 5 | திருமதி.கே.எச்.பி.எச்.கக்குனவேல | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை 11 | 2016.03.01 |
| 6 | திருமதி.ஜெ.டபிள்யு.எ.டி.எஸ்.ஜயவர்த்தன | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை 11 | 2016.07.01 |
| 7 | திரு.ஆர்.எம்.ஜயசிறி | வாகன ஓட்டுனர் சேவை 1 | 2016.01.27 |
| 8 | திரு.மாஹாசென் கட்டம்பே ஆராச்சி | வாகன ஓட்டுனர் சேவை 1 | 2016.06.08 |
| 9 | திருமதி.என்.முனசிங்க | அலுவலக உதவியாளர் சேவை 111 | 2016.03.09 |
| 10 | திரு.எச்.ஆர்.ஜெ.எஸ்.சூரியபண்டார | அலுவலக உதவியாளர் சேவை 111 | 2016.01.01 |
| 11 | திருமதி.எச்.எ.எச்.எ.ரஸ்சினி தில்ஹரா | அலுவலக உதவியாளர் சேவை 111 | 2016.07.07 |

### 1.3.4 ஊழியர் குழுவின் ஓய்வு பெற்றவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.கே.எ.டி. ஆரியதாச | அலுவலக உதவியாளர் சேவை | 2016.02.10 |

### 1.3.5 இடமாற்றம் பெற்று சென்ற உத்தியோகத்தர்கள்

| இல | பெயர் | பதவி | இடமாற்றம் பெற்று சென்ற திகதி |
|---|---|---|---|
| 01 | திருமதி.எச். சுரம்யா பொன்சேகா | பிரதி ஆணையாளர் (பதில் கடமை) | 2016.01.01 |
| 02 | திருமதி.என்.டபிள்யு. டயஸ் | பிரதி ஆணையாளர் | 2016.12.07 |
| 03 | திருமதி.பி.கே.எம்.ஜே.ரொட்றிகோ | கணக்காளர் | 2016.06.01 |
| 04 | திருமதி.எஸ்.எச்.ரி. தமாலிகா | அபிவிருத்தி உத்தியோகத்தர் 111 | 2016.11.02 |
| 05 | திருமதி.கே.ரி.எம்.எம் தென்னகோன் | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை 1 | 2016.05.02 |
| 06 | திரு.எல்.ஜி.யு. நிசாந்த | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை II | 2016.03.01 |
| 07 | திருமதி.ஜெ.டபிள்யு.எ.டி.எஸ்.ஜயவர்த்தன | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை II | 2016.7.27 |
| 08 | திருமதி.ஆர்.எல்.எம்.மல்காந்தி | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை III | 2016.03.01 |
| 09 | திருமதி.ஜி.எம்.எம்.கருசிங்க | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை III | 2016.03.14 |
| 10 | திரு.கே.எச்.ஜி.கே.குமார | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை III | 2016.03.10 |
| 11 | திரு.ஆர்.பி.டீ.எஸ்.ராஜபக்ஸ | வாகன ஓட்டுனர் சேவை I | 2016.01.13 |
| 12 | திரு.எல்.எ.நந்தசேன | வாகன ஓட்டுனர் சேவை II | 2016.01.14 |
| 13 | திரு.என்.டபிள்யு.ஆர் ரத்னசிறி | அலுவலக உதவியாளர் சேவை II | 2016.03.09 |
| 14 | திரு. எம்.எம்.எம் சூரியபண்டார | அலுவலக உதவியாளர் சேவை III | 2016.07.04 |

1.4 கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊழியர்குழுவினை பயிற்றுவித்தலும் அபிவிருத்தி செய்தலும்

### 1.4.1 உள்நாட்டு பயிற்சி நெறிகள்

2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் திணைக்களத்தின ஊழியர் குழுவின் அங்கத்தவர்கள் கீழ்காட்டப்பட்டுள்ளவாறு உள்நாட்டு கல்வி மற்றும் பயிற்சி நெறிகளில் அல்லது கருத்தரங்ககளில் பங்குபற்றியிருந்தனர்.

| தொடர் இல | பயிற்சிநெறி | பயிற்றுவித்த நிறுவனத்தின் பெயர் | காலம் | பங்கு பற்றிய உத்தியொகத்தர் பெயர், பதவி |
|---|---|---|---|---|
| 01 | ஒழுக்காற்று நடவடிக் கைகள் தொடர்பான பயிற்சிப்பாடநெறி | இலங்கை நிருவாக அபிவிருத்தி நிறுவகம் | 2016.03.28 - 2016.03.30 | திரு. எ.எ.எ.அதாவுதா |
| 02 | அரச உத்தியோகத்தர்கள் அறிந்து கொள்ள வேண்டிய சட்டங்கள் தொடர்பான பயிற்சி பாட நெறி | இலங்கை நிருவாக அபிவிருத்தி நிறுவகம் | 2016.03.28 2016.03.29 | திருமதி. கே.எல்.எஸ். மல்காந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| 03 | சிந்தனை மற்றும் தேர்ச்சி மட்டம் தொடர்பான அபிவிருத்தி | கொழும்பு பல்கலைகழகம் | 2016.04.29 | திரு.எஸ். எ. தலங்கம<br>திரு.எ. எ.என். அதாவுத |
| 04 | கருத்திட்டட முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிபட்டறை | மாவாட்ட செயலாளர் அலுவலகம்- திம்பிரிகஸ்சாய | 2016.06.14<br>2016.06.15 | திருமதி.எச்.எம்.எ.சந்தமாலி<br>திருமதி.கே.ஆர்.ரி.சேமரத்தின<br>திருமதி.ஏ.ஏ.என்.அத்தவுத<br>திருமதி.எஸ்.எச்.ரி.தமாலிகா<br>திரு.டி.எ.எஸ் சேனாதீர |
| 05 | சிந்தனை மற்றும் தேர்ச்சி மட்டம் தொடர்பான அபிவிருத்தி | கொழும்பு பல்கலைகழகம் | 2016.06.24 | செல்வி.எச்.எம்.பி.எம்.ரூபரத்தின<br>திருமதி.கே.எல்.எஸ்.மல்காந்தி |
| 06 | நட்டங்களை அறிக்கையிடல் மற்றும் பின்னடைவில் இருந்து மீழுதல் புறநீக்கம் செய்தல் | இலங்கை நிருவாக அபிவிருத்தி நிறுவகம | 2016.07.28<br>2016.06.29 | திருமதி பி.எம்.எ.எல். திசாநாயக்க |
| 07 | முகாமைத்துவ உதவியாளர்களை அபிவிருத்தி செய்வதற்கான பயிற்சிப்பட்டறை | நிர்மாணத்துறைசார் இயந்திர சாதனங்களின் பயிற்சி நிலையம் | 2016.08.25 (பிரதி 05 வியாழக்கிழமை) | திருமதி.என்.எச்.பி.எச். ககுனவேல |
| 08 | வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சைக்கான பயிற்சி வேலைத்திட்டம் | இலங்கை நிருவாக அபிவிருத்தி நிறுவகம் | 2016.08.05<br>2016.08.06 | திஆர் எம்.பி.எச் ரத்நாயக்க<br>திருமதி.ஆர்.எ.பி.ஹன்சிணி |
| 09 | அரச நிதி முகாமைத்துவம் | மாவாட்ட செயலாளர் அலுவலகம் | 2016.08.18<br>2016.08.19 | திருமதி..ரி.என்.கே.சேனாரத்தின<br>திரு என்.எஸ்.விஜேயசிங்க<br>திருமதி எப்.பி.ஜ.யு.தில்ருக்ஸி<br>திருமதி.யு.எல்.என் தனஞ்சலி<br>செல்வி.எ.எஸ்.ஜி.சஞ்ஜிவனி |
| 10 | அரச சம்பள கொடுப்பனவுத் தொகுதித் திட்டம் | மிலோதா நிறுவனம் | 2016.12.05-<br>2016.12.07 | திருமதி என்.எ.எச் பீரிஸ்<br>செல்வி.கே.எம். மீனோலி |
| 11 | அரச கணக்கியல் தொகுதி திட்டம்/முறைமை | மிலோதா நிறுவனம் | 2016.12.20 -<br>2016.12.22 | திருமதி என்.எச்.பி.எச். ககுனவேல<br>செல்வி எல்.எச்.எம்.பி. லன்சகார |

### 1.4.2 சர்வதேச பயிற்சி

2016ம் வருடத்தில் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் குழாத்தின் அங்கத்தவர்களில் பின்வருபவர்கள் சர்வதேச கல்வி மற்றும் பயிற்சி நெறிகளில் பங்குபற்றியிருந்தனர்.

| | பயிற்சி பெற்ற பாடநெறி | காலம் | நடைபெற்ற நாடு | பங்கு பற்றிய உத்தியோகத்தர் பெயர் மற்றும் பதவி |
|---|---|---|---|---|
| 01 | நிதி உள்ளிடு செய்யப்படுவது தொடர்பான சர்வதேச பயிற்சிப் பாட நெறி | 2016.01.07-2016.01.09 | இந்தியா | திரு ஆர் முரளிதரன் (கூட்டுறவு மேம்பாட்டு மற்றும் ஆய்வு உதவியாளர்) |
| 02 | கூட்டுறவு மற்றும் கிராமிய நிதி நிறுவனங்களின் பயிலுனர்களை பயிற்றுவிக்கும் தொழில் நுட்பம் தொடர்பான சர்வதேச பயிற்சிப் பாடநெறி | 2016.01.18 - 2016.01.22 | இந்தியா | திரு .டி.ஏ.ஏஸ்.சேனாதீர (கூட்டுறவு மேம்பாட்டு மற்றும் ஆய்வு உதவியாளர்) |
| 03 | கிராமிய மட்டத்தில் குறைந்த வருமானம் பெற்று வரும் குடும்பங்களில் உள்ள பெண்களை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் | 2016.06.02-2016.06.18 | கொரியா | திருமதி பி.ஜ.குரேரா (மாவட்ட அதிகாரியாக பதில் கடமை) |
| 04 | NEDAC இன் பொது கூட்ட செயலமர்வு | 2016.07.11 - 2016.07.15 | நேபாளம் | திரு.டி.ஜீவநாதன் (கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர்) |
| 05 | கிராமிய விவசாய நிதி நிறுவனங்களின் மறுசீரமைப்பும் வலுப்படுத்தலும் தொடர்பான கருத்தரங்கு | 2016.07.04-2016.07.08 | இந்தியா | திரு.டி.எ.எஸ் புலத்சிங்கல (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்) |
| 06 | கிராமிய மற்றும் கூட்டுறவு நிறுவனங்களின் தகவல் தொகுதி முகாமைத்துவம் | 2016.07.18 - 2016.07.22 | இந்தியா | திரு கே.எம் முதித்த சமிந்த (உதவி ஆணையாளர்) |
| 07 | கிராமிய அபிவிருத்தியின் பொருட்டு கூட்டுறவு மற்றும் கிராமிய நிதி நிறுவனங்களின் முகாமைத்துவம் | 2016.08.22-2016.08.26 | இந்தியா | திரு.எஸ். எம். சம்பத் (கூட்டுறவு மேம்பாட்டு மற்றும் ஆய்வு உதவியாளர்) |
| 08 | அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் காணப்படும் நுகர்வோர் பாதுகாப்பு நிறுவனங்கள் தொடர்பான கருத்தரங்கு | 2016.08.10 - 2016.08.24 | சீனா | திரு.பி.ஏ சரத் ஆனந்த (உதவி ஆணையாளர்) |
| 09 | சந்தைப்படுத்தல் கூட்டுறவுச் சங்கங்களுக்கான முகாமைத்துவ தீர்மானம் இயற்றும் திறனை அபிவிருத்தி செய்யும் பயிற்சி நெறி | 2016.09.07 - 2016.09.10 | இந்தியா | திருமதி. என். டபிள்யு டயஸ் (பிரதி ஆணையாளர்) |
| 10 | அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான மேற்பார்வை அதிகாரிகள் மற்றும் வியாபார உரிமையாளர்களுக்கான இயந்திர கைத்தொழில் பற்றிய கருத்தரங்கு | 2016.11.01 - 2016.11.21 | சீனா | திரு.சந்தன பொன்சேகா (மாவட்ட அதிகாரி பதில் கடமைபுரியும்) |

1.4.3 மக்கள் வங்கியின் அனுசரனையின் மூலம் நடைபெற்ற பயிற்சிக் கருத்தரங்கு.

| தொடர் இலக்கம் | திகதி | பயிற்சி வேலைத்திட்டம் | பங்கு பற்றிய உத்தியோகத்தர்கள் |
|---|---|---|---|
| 1 | 2016.03.17 மற்றும் 18 | தாபனக் கோவை மற்றும் நிதி பிரமாணங்கள் தொடர்பான அறிவுட்டும் பயிற்சிப்பட்டறை | சகல வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கும் |
| 2 | 2016.03.29 | கூட்டுறவு சட்டம் மற்றும் கூட்டுறவு சட்டத்துடன் இணைந்து காணப்படும பொது சட்டங்கள் தொடர்பான அறிவுட்டும் பயிற்சிப்பட்டறை | கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் |
| 3 | 2016.05.05, 06 மற்றும் 07 | தண்டப்பணம் அறவிடும் நடைமுறை மற்றும் கூட்டுறவு நுண் நிதியில் தொடர்பான பயிற்சி கருத்தரங்கு | சகல வெளிக்கள உத்தியோ கத்தர்கள் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் |
| 4 | 2016.09.08 | தரமான அரச சேவையின் பொருட்டு மனவள ரீதியான செயற்பாடுகள் | திணைக்களத்தின் சகல உத்தியோகத்தர்களும் |
| 5 | 2016.09.22 மற்றும் 23 | நுண் நிதியியல் சட்டம் மற்றும் கணக்காய்வு செயல்முறைகள் தொடர்பான பயிற்சி கருத்தரங்கு | திணைக்களத்தின் சகல உத்தியோகத்தர்கள் |
| 6 | 2016.11.08 | கணக்காய்வு செயல்முறைகள் தொடர்பான பயிற்சி பட்டறை | மாகாண ஆணையாளர்கள், திணைக்களத்தின் வெளிக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் சங்கத்தின் பிரதிநிதிகள் |
| 7 | 2016.11.15 | நுகர்வோர் சட்டங்கள் மற்றும் விதிகள் தொடர்பான தெளிவுபடுத்தும் கருத்தரங்கு(நுகர்வோர் அதிகார சபைய-ால நிகழ்த்தப்பட்டது) | நுகர்வோர் சட்டங்கள் மற்றும் விதிகள் தொடர்பான தெளிவுபடுத்தும் கருத்தரங்கு (நுகர்வோர் அதிகார சபையால நிகழ்த்தப்பட்டது) |
| 8 | 2016.12.27 | கணக்காய்வு செயல்முறைகள் தொடர்பான பயிற்சி பட்டறை | சகல வெளிக்கள உத்தியோகத்தர்கள் |
| 9 | 2016.12.29 | நிறுவனங்களின் சங்கங்களில் வருடாந்த கணக்காய்வின் பொருட்டு நிதி நிலை அறிக்கைகளை தயாரிப்பதற்கான பயிற்சி கருத்தரங்கு | நிறுவனங்களின் சங்கங்களில் கடமை புரியும் கணக்காளர்கள் கணக்குப் பதிவாளர்கள் மற்றும் உள்ளக கணக்காய்வாளர்கள் |

# 02 அத்தியாயம்

## அபிவிருத்தி செயற்பாடுகள்

### 2.1 2016 ஆம் ஆண்டு கூட்டுறவு அமைப்புக்களை பதிவுசெய்தல

2016ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கங்கள்

| | சங்கத்தின் பெயர் | பதிவு இலக்கம் | பதிவு செய்யப்பட்ட திகதி |
|---|---|---|---|
| 01 | வ/து விவசாய மற்றம் சூற்றாடல் துறைசார் நிபுணர்களின் கூட்டுறவு சங்கம் | சமு. 46 | 2016.02.08 |
| 02 | வ/து இலங்கை தொழில் நுட்ப அபிவிருத்தி தேசிய கூட்டுறவு சங்கம் | சமு. 48 | 2016.07.02 |
| 03 | வ/து தேசிய பயிற்சி துறைசார் நிபுணர்களின் கூட்டுறவு சங்கம் | சமு. 51 | 2016.09.28 |

### 2.2 கூட்டுறவு சங்கத்தின் துணைவிதிகளில் திருத்தம்

| | சம்மேளனம் அல்லது சங்கத்தின் பெயர் | துணைவிதிகளில் திருத்தம் செய்யப்பட்ட திகதி |
|---|---|---|
| 01 | வ/து இலங்கை இளைஞர் சேவைகள் கூட்டுறவுச் சங்க சம்மேளனம் | 2016.02.03 |
| 02 | வ/து அஞ்சல் மற்றும் தொலைதொடர்பு திணைக்களத்தின் பணியாளர்களின் கூ.ட்டுறவு வங்கி சங்கம். | 2016.03.24 |
| 03 | வ/து துறைமுக அதிகார சபை ஊழியர்களின் நலன்புரி சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம் | 2016.03.31 |
| 04 | வ/து பதிவாளர் நாயகத்தின் திணைக்கள பணியாளர்களின் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம் | 2016.05.30 |
| 05 | வ/து இலங்கையின் மகளிர்களுக்கான அபிவிருத்தி சேவைகள் கூட்டுறவுச் சங்கம். | 2016.07.07 |
| 06 | வ/து தோட்டத் தொழிலாளர்களின் வீடமைப்பு சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம். | 2016.08.01 |
| 07 | வ/து சுகாதாரசேவை நிதி மற்றும் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம். | 2016.08.31 |
| 08 | வ/து சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் கமத்தொழில் பரிசோதனை உதவியாளர்களின் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம். | 2016.09.21 |
| 09 | வ/து கல்வித் துறைசார் பணியாளர்களின் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம் | 2016.10.28 |
| 10 | வ/து துறைமுக அதிகார சபை ஊழியர்களின் கூட்டுறவு வங்கி சங்கம் | 2016.11.17 |
| 11 | வ/து புகையிரத அதிபர் மற்றும் எழுதுவினைஞர்களின் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம் | 2016.12.01 |
| 12 | வ/து இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் சிக்கன கடனுதவி மற்றும் கூட்டுறவு சங்கம் | 2016.12.28 |

2.3 கூட்டுறவு சங்கத்தின்/ சம்மேளனத்தின் தேர்தல்கள் செயற்பாடுகள்

| | சம்மேளனம் அல்லது சங்கத்தின் பெயர் | தேர்தல்கள் நடாத்தப்பட்ட திகதி |
|---|---|---|
| 01 | வ/து கல்வித் துறைசார் பணியாளர்களின் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம் | 2016.05.14 |
| 02 | வ/து இலங்கை தேசிய மீனவ கூட்டுறவு சங்க சம்மேளனம். | 2016.07.23 |
| 03 | வ/து இ.போ. சேவை ஊழியர்களின் சிக்கன கடனுதவி | 2016.09.08 |
| 04 | வ/து சுகாதாரத் திணைக்களத்தின் பணியாளர்களின் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம். | 2016.11.05 |
| 05 | வ/து இலங்கை தேசிய கூட்டுறவுச் சபை | 2016.12.04 |
| 06 | வ/து துறைமுக அதிகார சபை ஊழியர்களின் கூட்டுறவு வங்கி சங்கம் | 2016.12.20 |

2.4 செயற்பாடற்ற சங்கங்களின் முடிவுறுத்தல்.

❖ பதிவு இரத்துச் செய்யப்பட்ட சங்கங்கள்.

1. வ/து ஏழுத்தாளர்களின் கூட்டுறவு சங்கம்
2. வ/து இலங்கை முகாமைத்துவ ஆலோசனை சேவை கூட்டுறவு சங்கம்
3. வ/து கலை இலக்கிய வடிவமைப்பாளர்களின் கூட்டுறவு சங்கம்.
4. வ/து இலங்கை காணக்காய்வு சேவை கூட்டுறவு சங்கம்.
5. வ/து அகில இலங்கை கட்டிட பொருட்கள் உற்பத்தியாளர்கள் மற்றும் சிக்கன கூட்டுறவு சங்கம்.
6. வ/து அகில இலங்கை அபுடாபி கடல்கலன் குத்தகை கொள்வனவாளர் மீனவ கூட்டுறவு சங்கம்.
7. வ/து அகில இலங்கை தொழில் நுட்ப கூட்டுறவு சங்கம்.
8. வ/து இலங்கை பாதுகாப்பு சேவை நலன்புரி மற்றும் கடனுதவி கூட்டுறவு சங்கம்.
9. வ/து இலங்கை தொழில்சார் பத்திரிகையாளர்களின் நலன்புரி கூட்டுறவு சங்கம்.
10. வ/து இலங்கை கூட்டுறவு பொறியில் நிறுவகம்.

❖ பதிவை இரத்துச் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள சங்கங்கள்.

1. வ/து இலங்கை நிறுவனங்களின் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்க சம்மேளனம்.
2. வ/து இலங்கை கை வினை பொருட்கள் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கம்.
3. வ/து இலங்கை துறைமுக சேவை வழங்கல் கூட்டுறவு சங்கம்.

❖ அறிக்கை பெற்றுக் கொள்ள நிச்சயிக்கப்பட்டுள்ள சங்கங்கள்.


1. வ/து அகில இலங்கை கூட்டுறவு மகளிர்களின் ஒருமைப்பாட்டு சங்கம்.
2. வ/து இலங்கை தேசிய கூட்டுறவு மகளிர் மகா சம்மேளனம்.

## 2.5 கூட்டுறவுச் சங்கங்களின் நியதிச்சட்ட ரீதியான கணக்காய்வு செயற்பாடுகள்

இத் திணைக்களத்தினது சட்டரீதியான பொறுப்புகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட வேண்டிய ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தேசிய ரீதியான கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் ஒன்றியங்களின் கணக்காயவைத் திட்டமிட்ட மற்றும் நிறைவடைந்த கணக்காய்வு தொடாபாக 2011 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆண்டு வரையிலான நிலை கீழ்க்கர்டப்படுமாறு அமையும்

| வருடம் | திட்ட மிட்ட கணக்காய்வு | நிறைவு செய்த கணக்காய்வு | நிறைவு செய்த கணக்காய்வின் சதவீதத்தில் |
|---|---|---|---|
| 2011 | 66 | 64 | 97% |
| 2012 | 83 | 63 | 76% |
| 2013 | 74 | 61 | 82% |
| 2014 | 68 | 44 | 64.7% |
| 2015 | 80 | 11 | 13.75% |
| 2016 | 102 | 37 | 36.27% |

5ஆண்டு காலப் பகுதியில் திட்ட மிட்ட கணக்காய்வு மற்றும் நிறைவு செய்த கணக்காய்வு




## 2.6 சட்ட செயற்பாடுகள்

சட்ட செயற்பாடுகளுடன் தொடர்புடைய பிரதான செயற்பாடுகளாக பின்வரும் நடவடிக்கைகளை சுருக்கமாகக் காட்டமுடியும்.

- ❖ கூட்டுறவுச் சங்கங்களிற் குரிய சட்டதிட்டங்கள், விதிகள் மற்றும் யாப்பு தொடர்பில் வரைவிலக்கணத்தை முன்வைத்தலும் மாகாண ஆணையாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட சட்ட ரீதியான பிரச்சனைகள் தொடர்பாக ஆலோசனைகள் மற்றும் தேவையான ஒத்துழைப்பை வழங்கல்.
- ❖ மாதிரி துணைவிதிகளை இயற்றுதுலும் இயற்றப்பட்ட துணைவிதிகளை அப்பியாசம் செய்தல்.
- ❖ கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் 58 ஆவது உறுப்புரையின் கீழ் சம்மேளனம் அல்லது சங்கங்களின் ஊடாக சமர்ப்பிக்கப்படும் நடுத்தீர்வுக்குரிய முறைப்பாட்டு மனுக்களின் மீதான உரிய விசாரணைகளை மேற்கொள்ளுதல் தீர்ப்புகளை வழங்குதல் மேன்முறையிடுகளை விசாரணை செய்தல் மற்றும் அவ்வாறு வழங்கப்பட்ட தீர்ப்புக்களை நீதிமன்றத்தின் மூலம் வலுப்பெறச் செய்தல்.
- ❖ கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களை பிரதிவாதிகாளகக் கொண்டு மாவட்ட மேன்முறையீட்டு மற்றும் உச்ச நீதிமன்றத்தினால் முன்வைக்கப்படும் பிரச்சனைகள் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தினுடாக தேவையான விபரங்களையும் மதிப்புரைகளையும் பெற்றுக் கொண்டு அதற்கமைய நடவடிக்கை எடுத்தல்.

### 2.6.1 பிணக்குகளுக்கான நடுவர்தீர்ப்பு

1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க மற்றும் 1983 ஆம் ஆண்டின் 32 இலக்க திருத்தச்சட்டங்களுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1972 ஆம் ஆண்டின் 5 இலக்க கூட்டுறவு சங்கச் சட்டம் 58 வது பந்தியில் குறிப்பிடப்பட்டதன் படி கூட்டுறவு சங்கங்களின் நடுவர்தீர்ப்புக்காக 2016 ஆண்டு திணைக்களத்திற்க்கு கிடைக்கப் பெற்ற கோப்புக்கள் பின்வருமாறு அமைந்திருந்தது.

| விபரம் | மொத்தம் |
|---|---|
| 2016.01.01 திகதியில் நடுவர்தீர்ப்புக்கு வழங்குவதற்காக உள்ள கோப்புக்களின் எண்ணிக்கை | 480 |
| 2016 ஆண்டு காலப்பகுதியில் நடுவர்தீர்ப்புக்கு வழங்குவதற்காக கிடைக்கப் பெற்ற கோப்புக்களின் எண்ணிக்கை | 28 |
| 2016 ஆண்டு காலப்பகுதியில் நடுவர்தீர்ப்புக்கு வழங்குவதற்காக வழங்கிய கோப்புக்களின் எண்ணிக்கை | 222 |
| 2016.12.31 திகதி சட்டப்பிரிவில் உள்ள கோப்புக்களின் எண்ணிக்கை | 286 |
| 2016 ஆண்டு காலப்பகுதியில் நடுவர்தீர்ப்பு செயற்பாடுகளை நிறைவு செய்த கோப்புக்களின் எண்ணிக்கை | 118 |

### 2.6.2 நீதிமன்றத்தின் மூலம் நடுத்தீர்ப்பை வலுப்பெறச் செய்தல்

1972 இலக்கம் 5 கொண்ட கூட்டுறவு சங்கச் சட்டம் 58 வது பந்தியில் குறிப்பிடப்பட்டதன் படி கூட்டுறவு சங்கத்தின் மூலம் நடுத்தீர்ப்புக்காக ஒப்படைக்கப்பட்ட பிணக்குகளிற்ககு நடுத்தீர்ப்பு வழங்கியதன் பின் சம்பந்தப்பட்ட தொகை அறவிடப்படவில்லை எனின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் மூலம் அத்தகைய தொகையானது தண்டப்பணத்துடன் அறவிடப்படுவதற்கு உரிய நீதவான் நிதிமன்றத்தின் மூலம் வலுவுட்டல் செய்யப்படுவதுடன் அவ்வாறு நிதிமன்றத்தின் ஊடாக அறவிடப்பட்ட தொகையானது மீள சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்கத்திற்க்கு அனுப்பிவைக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| 2016.12.31 திகதியில் உள்ளவாறு நிதிமன்றத்தின் மூலம் வலுப்பெறச்செய்வதற்காக உள்ள கோரிக்கை விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 881 |
| 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிதிமன்றத்தின் மூலம் வலுப்பெறச்செய்வதற்காக கிடைத்த கோரிக்கை விண்ணபங்களின் எண்ணிக்கை | 147 |
| 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிதிமன்றத்தின் மூலம் வலுப்பெறச் செய்த நடுத்தீர்ப்புக்களின் எண்ணிக்கை | 315 |
| 2016.12.31. திகதியில் உள்ளவாறு நிதிமன்றத்தின் மூலம் வலுப்பெறச் செய்வதற்காக உள்ள கோரிக்கை விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 713 |

### 2.6.3 ஆண்டுக்குரிய காலப்பகுதியில் நிறைவடைந்த வழக்குகள்

| வழக்கு இலக்கம் | சம்பந்தப்பட்ட சங்கம் |
|---|---|
| DSP/48/16 | வ/து கல்வித் துறைசார் பணியாளர்களின் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம் |

## 2.7 கூட்டுறவு நிதிய முகாமைத்துவம்

1972 இல 05 ஐக் கொண்ட கூட்டுறவுச் சட்டத்தின் 43 (1) (ஆ) உறுப்புரை மற்றும் 57 (3) உறுப்புரையின் கீழ் குறிப்பிடப்படும் நிதியம் இவ்வாண்டினுள்ளும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொறுப்பில் பேணப்படுவதுடன் அந்நிதியத்தின் செலவு மற்றும முதலீடு செய்தல் தொடர்பான நடவடிக்கைகள் நிதியக் குழுவின் தீர்மானங்களுக்கேற்ப நிகழ்த்தப்படும். அந்நிதியத்திற்குப் பங்களிப்பு வழங்குகின்ற சங்களிடமிருந்து தொகையை அறவிடுதல், செலவு செய்தல் முதலீடு செய்தல் கடன் மற்றும் நன்கொடை வழங்குதல் போன்ற செயற்பாடுகளை கௌரவ அமைச்சின் மேற்பார்வையின் கீழும் வழிகாட்டலின்கீழும் அமைச்சின் செயலாரின் பங்களிப்புடன் கூடிய நிதியக்குழுவின் தீர்மானத்திற்கு அமைய முகாமை செய்யப்படுகின்றது

- கூட்டுறவு நிதியம்
- கூட்டுறவு மிகை நிதியம்

### 2.7.1 கூட்டுறவு நிதியம்

கூட்டுறவு சங்கங்களின் சுதந்திரத்திற்கு முன்னரான கூட்டுறவுச்சங்ககளின் கட்டளைச் சட்ட ஏற்பாடு (107வது அத்தியாயம்) 46 பந்தியின் பிரகாரம் வெளியிடப்பட்ட இல 10086 மற்றும் 1950.03.24 திகதி வெளியிட்டப்பட்ட வர்த்தமானிக்கிணங்க அமைக்கப்பட்ட இந்நிதியமானது கௌரவ அமைச்சரின் வளிகாட்லின் கீழும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் பதிவாளரினால் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது

தேசிய திணைக்களத்தின் இந்நிதியத்திற்கான பங்களிப்பு இத்திணைக்களத்தின் கண்காணிப்பு மேற்பார்வை மூலம் கட்டுப்படுத்தப்படுகின்ற கூட்டுறவு சம்மேளனங்கள் மற்றும் நாடளாவிய ரீதியான செயற்பாட்டை கொண்ட ஆரம்ப கூட்டுறவு சங்கங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

### 2.7.2 கூட்டுறவு மிகை நிதியம்

1972 ஆம் ஆண்டின் இல 5 ஐ கொண்ட கூட்டுறவு சங்கச் 57 (3) பந்தியின் படியும் அதன் நியதிக்கு அமைவாக இந்த நிதியம் உருவாக்கப்பட்டது. இலக்கம் 93/5 கெண்ட 1974 ஜனவரி மாதம் 10 திகதி வெளியிடப்பட்ட விசேட வர்த்தமனிக்கமைய 44(1) முதல் 44(111) வரை குறிப்பிடப்பட்ட பதிவுசெய்யப்பட்ட சங்கங்களை முடிவுறுத்தும் போதான சந்தர்ப்பத்தில் அத்தகைய சங்கத்தின் எதாவது கடன் வழங்கியவர்களுக்கு செத்துக்களை பகிர்ந்தழிக்கும் யோசனையின் கீழ் தனக்கு கிடைக்க வேண்டியவை தொடர்பாக மிதியை பெற்றுக்கொள்வதற்காக நிதி ரீதியான உதவியை வழங்கல் இந்த ஆண்டு காலப்பகுதியில் மாகாண கூட்டுறவு சங்கங்களின் செயற்பாடுகளை முன்னேற்றுவதற்காக சலுகை வட்டிவீதத்தின் அடிப்படையில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது.

## 2.8 2016 ம் ஆண்டிற்கான அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தினூடாக நிதி ஒதுக்கம் மற்றும் செலவினங்களை ஏற்றல்

### மீண்டெழும் செலவீனங்கள்.

| செலவு விடய இலக்கம் | தொகுதி/செலவு விபரம்/விடயங்கள் | தேறிய நிதி ஒதுக்கம் ரூ. | 2016.12.31ம் திகதியில் மொத்த செலவு ரூ. |
|---|---|---|---|
| 1001 | சம்பளம் மற்றும் ஊதியம் | 25,000,000.00 | 23,713,535.66 |
| 1002 | மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தின சம்பளம் | 775,000.00 | 543,208.80 |
| 1003 | ஏனைய கொடுப்பனவுகள் | 23,077,000.00 | 22,727,839.02 |
| 1101 | போக்குவரத்து செலவுகள்-உள்ளாடு | 2,000,000.00 | 1,996,685.75 |
| 1102 | போக்குவரத்து செலவுகள் -வெளிநாடு | 700,000.00 | 624,776.40 |
| 1201 | எழுதுபொருள் மற்றும் அலுவலக தேவைகள | 1,100,000.00 | 1,098,696.45 |
| 1202 | எரிபொருட்கள் | 1,680,000.00 | 1,005,897.50 |
| 1203 | உணவுப்பொருட்கள் மற்றும் சீருடை | 66,500.00 | 52,000.00 |
| 1301 | வாகனங்கள் | 1,915,500.00 | 1,415,871.42 |
| 1302 | இயந்திரங்களும் இயந்திர உபகரணங்களும். | 600,000.00 | 599,215.58 |
| 1402 | அஞ்சல் மற்றும் தொலைதொடர்பு | 1,000,000.00 | 992,441.03 |
| 1403 | மின்சார மற்றும் குடிநீர் | 3,173,000.00 | 2,919,345.24 |
| 1404 | குத்தகை மற்றும் உள்ளூராட்சி வரி | 650,000.00 | 571,227.13 |
| 1405 | ஏனையவை | 2,000,000.00 | 1,963,608.63 |
| 1505 | உதவி மற்றும் பங்களிப்பு தொகை | 383,500.00 | 383,236.48 |
| 1506 | அரசாங்க ஊழியர்களின் சொத்து கடன் வட்டி | 600,000.00 | 520,458.81 |
| | மொத்தம் | **64,720,500.00** | **61,128,043.90** |

மூலதனச் செலவீனங்கள்.

| செலவு விடய இலக்கம் | தொகுதி/செலவு விபரம்/விடயங்கள் | தேறிய நிதி ஒதுக்கம் ரூபா | 2016.12.31ம் திகதியில் மொத்த செலவு ரூபா |
|---|---|---|---|
| 2002 | இயந்திரங்களும் இயந்தரமயப்படுத்தலும். | 100,000.00 | 80,500.00 |
| 2003 | வாகனங்கள் | 400,000.00 | 400,000.00 |
| 2102 | வீட்டு உபகரணங்களும் அலுவலக உபகரணங்களும். | 300,000.00 | 297,502.27 |
| 2103 | இயந்திரங்களும் இயந்தரமயப்படுத்தலும். | 334,000.00 | 332,850.00 |
| 2401 | பயிற்றுவித்தல் மற்றும் ஆற்றலை விருத்தி செய்தல் | 359,500.00 | 359,291.66 |
| 2502-1 | நிதி பிரமாணங்கள்<br>கிராமிய வங்கி ஒழுங்குபடுத்தல் | 4,606,000.00 | 4,605,216.51 |
| 2502-2 | சமுபதீபனி கூட்டுறவு பத்திரிகை அச்சிடல் | 4,719,100.00 | 4,719,045.00 |
| 2502-3 | கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்-கைத் தொழில் பிரிவு | 640,900.00 | 383,418.70 |
| | மொத்தம் | **11,459,500.00** | **11,177,824.14** |

மீண்டெழும் செலவுகள் மற்றும் மூலதனச் செலவுகளுக்கான சுருக்கம்.

| | விபரம் | தேறிய நிதி ஒதுக்கம் ரூபா | 2016.12.31ம் தி-கதியில் மொத்த செலவு ரூபா |
|---|---|---|---|
| 01 | மீண்டெழும் செலவுகளின் மொத்தம் | 64,720,500.00 | 61,128,043.90 |
| 02 | மூலதனச் செலவுகளின் மொத்தம் | 11,459,500.00 | 11,177,824.14 |
| | மொத்தம் | **76,180,000.00** | **72,305,868.04** |

## 2.9 கிராமிய வங்கி ஒழுங்குபடுத்தல்

| செயற்பாடுகள் | அளவியல் அலகு | பௌதீக முன்னேற்றம் | |
|---|---|---|---|
| | | இலக்கு | அடைவுகள் |
| தரவுகள் மற்றும் தகவல்கள் சேகரித்தல் (நிதி நிலைமை மற்றும் பகுப்பாய்வறிக்கை என்பன) | அறிக்கைகளின் எண்ணிக்கை | 32 | 12 |
| திடிர் பரிசோதனைகளை மேற்கொள்ளுதல் | பரிட்சிப்புக்களின் எண்ணிக்கை | 04 | - |

| | | | |
|---|---|---|---|
| கிராமிய வங்கி செயற்பாட்டு கைநூல் மற்றும் தெளிவு படுத்தும் செயலமர்வுகள் மற்றும் பயிற்சி பட்டறைகளை நடாத்துதல் | பயிற்சி செயலமர்வுகளின் எண்ணிக்கை | 30 | 19 |
| மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் சங்கத்தின் ஊழியர்களுக்கான பயிற்சி பட்டறைகளை நடாத்துதல் | பயிற்சி செயலமர்வுகளின் எண்ணிக்கை | 03 | - |
| தேசிய கூட்டுறவு வங்கி ஒழுங்குபடுத்தல் செயற்குழு கூட்டடத்தை நடாத்துதல் | செயற்குழு கூட்டங்களின் எண்ணிக்கை | 05 | 03 |

## 10 கருத்திட்டங்களை செற்படுத்தல்

### ❖ போரினால் பாதிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களை புனர்நிர்மானம் செய்தல்.

போரினால் பாதிக்கப்பட்ட கூட்டுறவு சங்கங்களை புணர்நிர்மானம் செய்யும் நோக்கத்தோடு வ/ப சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் மற்றும் வ/ப அளவெட்டி மல்லாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் கிராமிய வங்கிப் பிரிவின் கணக்குகள் பேணப்படும் முறைமையை கணணிமயப்படுத்தும் எதிர்பார்ப்புடன் வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக கடன் வழங்கப்பட்டுள்ளது.

### ❖ இளைஞர்கள் யுவதிகள் மத்தியில் சுயதொழில் வாய்ப்பை எற்படுத்த ஒத்துழைப்பை வழங்குதல்

மன்னார் மாவட்டத்தின் இளைஞர்கள் யுவதிகளின் இடையே சுயதொழில் வாய்ப்பை உருவாக்கும் நோக்குடன் திறைமைசாலியான இளைஞர்கள் யுவதிகளுக்கு கடன் வழங்கி சுயதொழிலை ஆரம்பபிப்பதற்கான ஒத்துழைப்பை வழங்கல். இளைய சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கான சுயதொழில் பயிற்சியை வழங்குவதற்காக விவசாய பண்ணை ஒன்றை ஆரம்பிக்க ரூபா. 02 மில்லியன் முதலீடு செய்யப்பட்டுள்ளதுடன் வ/ப மன்னார் மாவட்ட இளைஞர் சேவை கூட்டுறவுச் சங்கங்கத்திற்கு ரூபா 10 மில்லியன் வழங்கப்பட்டு அவை உறுப்பினர்களிடையே சுயதொழில் வாய்ப்பை எற்படுத்த வழங்கப்பட்ட கடனாக பகிர்தளிக்கப்பட்டுள்ளது.

### ❖ சர்வதேச கூட்டுறவு தினம் கொண்டாட்டங்கள்.

2016ம் ஆண்டு 94வது சர்வதேச கூட்டுறவு தினவைபவம் கொழும்பில் தாமரைத்தடாக கலையரங்கில் உணர்வுபூர்வமாக அனுடிக்கப்பட்டது. இங்கு அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் றிஷாட் பதியுதீன் இராஜங்க அமைச்சர் சம்பிக்க பிரேமதாச மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க கிழக்கு மாகாண ஆளுனர் ஒஸ்டின் பெர்னாந்து கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் செயலாளர் டி.எம். கே.பி தென்னக்கோன் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் (நிரல்) டி. ஜீவநாதன் இலங்கை தேசிய கூட்டுறவு சபை தலைவர் லலித் ஏ.பீரிஸ் உட்பட கூட்டுறவு தலைவர்கள் மற்றும் பெருமளவிலான கூட்டுறவாளர்கள் பங்குபற்றியிருந்தனர்.

சர்வதேச கூட்டுறவு தினத்துடன் இணைந்ததாக குறித்த வருடத்தின் யூன் மாதம் 26ம் திகதி தேசிய கூட்டுறவுச் சபையின் வழி நடத்தலின் கீழ் கூட்டுறவு மற்றும் சிறுவர் பாதுகாப்பு என்ற தலைப்பிலும் யூன் 27ம் திகதி கிராமிய வங்கி மகா சம்மேளனத்தின் வழி நடத்தலில் கூட்டுறவும் சுற்றாடலும் என்ற

தலைப்பிலும் யூன் 28ம் திகதி வ/ப சுகாதார திணைக்களத்தின் ஊழியர்களின் சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் வழி நடத்தலில் கூட்டுறவும் ஆரோக்கிய வாழ்வும் என்ற தலைப்பிலும் யூன் 29ம் திகதி வ/ப மகளீர் அபிவிருத்தி சேவைகள் கூட்டுறவுச் சங்கத்தின் வழி நடத்தலில் கூட்டுறவும் மகளீரும் என்ற தலைப்பிலும் யூன் 30ம் திகதி தேசிய கூட்டுறவு பயிற்சி நிறுவனத்தின் வழி நடத்தலின் கல்வி மற்றும் அங்கத்தவர்களின் பயன்பாடு மற்றும் துடிப்பான அங்கத்தவர் பங்குபற்றுதுல் என்ற தலைப்பில் யூலை 01ம் திகதி சணச மகா சம்மேளத்தின் வழி நடத்தலின் கூட்டுறவு மற்றும் நிலையையான அபிவிருத்தி என்ற தலைப்பிலும் பல தரப்பட்ட நிகழ்வுகள் நடைபெற்று இருந்தன.

## 2.11 திட்டமிடல் செயற்பாடுகள்

### புள்ளிவிபரவியல் அறிக்கை

இத்திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கம் / சம்மேளனம் மற்றும் மாகாண திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கம் / சம்மேளனங்களின் தகவல்கள் சேகரித்து தேசிய ரீதியில் ஒருமித்த புள்ளிவிபரவியல் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் இந்த அறிக்கை கூட்டுறவுாளர்களுக்கும் இத்துறைசார்பான ஆர்வமுடைய இலங்கை பிரஜைகளுக்கு பயன்படக்கூடியதாக இருக்கும்

### செயற்பாட்டுத் திட்டமிடல்

2016ம் ஆண்டு கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் செயற்பாட்டுத் திட்டமிடல் மற்றும் வினைத்திறன் மற்றும் வினைத்திறனை அதிகரிக்கும் பொருட்டு வருட ஆரம்பத்தில் சகல பிரிவுகளினதும் கடமை பொறுப்புக்களை ஒருங்கிணைத்து செயற்பாட்டுதிட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

## 2.12 ஊடக செயற்பாடுகள்

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடக பிரிவு மூலம் ஆற்றப்படுகின்ற பிரதான செயற்பாடாக கூட்டுறவுதுறை தொடர்பான தகவல்களையும் நிகழ்வுகளையும் கூட்டுறவு சமூகத்திற்கும் நாட்டு மக்களிற்கும் கிடைக்க செய்வதாகும்.

### சமூபதீபணி சஞ்சீகை பத்திரிகை பிண்ணிணைப்பு.

மேற்படி நோக்கத்தை நிறைவு செய்யும் பொருட்டு 2006ம் ஆண்டு முதல் சமூதீபணி சஞ்சீகை பத்திரிகை பிண்ணிணைப்பாக வெளியிடப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு மாதமும் கடைசி வெள்ளிகிழமைகளில் சமூதீபணி சஞ்சிகையானது சிங்கள மொழி மூலம் 8 பக்கங்களுடன் தினமின பத்திரிகையின் பின்னிணைப்பாகவும் இதற்கு இணையாக தமிழில் மொழி மூல சஞ்சிகையானது ஒரு பக்கத்துடன் தினகரன் பத்திரிகையின் பின்னிணைப்பாகவும் வெளியிடப்பட்டு வருகின்றது. இதற்காக எமது திணைக்களமானது அசோசியேற்றட் நியுஸ் பேப்பர் நிறுவனத்துடன் மிகநெருக்கமாக இணைந்து செயற்பட்டு வருகின்றது. மேற்படி பத்திரிகையில் நாடளாவிய ரீதியில் காணப்படும் கூட்டுறவுச் சங்கங்களில் சிறப்பாக செயற்படுகின்ற கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பான விரிவான கட்டுரைகள் வெளியிடப்படுவதுடன் இலங்கையின் கூட்டுறவுத்துறையின் ஆரம்பம் தொடக்கம் அதன் வியாபிப்பு மற்றும் அவற்றின் பல தரப்பட்ட சமூக பணிகள் தொடர்பான கட்டுரைகள் உலக கூட்டுறவுதுறை தொடர்பான கட்டுரைகள் மற்றும் அவற்றின் செயற்பாடுகள் அடங்கிய ஓர் முழுமையான சஞ்சிகையாக வெளியிடப்பட்டு வருகின்றது.

### கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் இணையத்தளம்.

உலகளாவிய ரீதியில் பரந்து வாழ்கின்ற கூட்டுறவு மற்றும் சாதாரண பிரஜைகளின் விருப்பதேரிவிற்கு ஏற்ப இத்திணைக்களம் மற்றும் இத்திணைக்களத்தினால் ஆற்றப்படும் சேவைகள் தொடர்பாக தகவல்களை பெற்றுகொள்ளக் கூடிய வாய்பபை மேற்படி திணைக்களத்தின் இணையத்தளம் ஏற்படுத்தி கொடுக்கின்றது.

கூட்டுறவுதுறை சார்பான தகவல்கள் பெற்று கொள்ளக்கூடிய வாய்ப்புக்கள் மேற்படி ஊடகத்தினால் விரிவாக்கப்பட்டுள்ளது. உலகளாவிய ரீதியில் பயன்படுத்தப்படும் அதிநவீன தொழில்நுட்பத்தின் உதவியுடன் இலங்கையின் கூட்டுறவுதுறையை தரம் உயர்த்த கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் இச் செயற்பாடானது பெருமளவு பங்களிப்பு செய்யும் என்பதில் ஐயமில்லை.

# 3ம் அத்தியாயம்

## தேசிய மட்டத்திலான கூட்டுறவு அமைப்புகள்.

இந்த வருடத்தில் தேசிய ரீதியிலான கூட்டுறவு சம்மேளனங்கள் 13 செயற்பாட்டுடையதாக காணப்பட்டன. கீழ்க்காட்டப்படும் உயர் மட்ட கூட்டுறவு சம்மேளனங்களில் முகாமைத்துவ மற்றும் வியாபார நடவடிக்கைகள் தொடர்பாக வழிகாட்டல் மற்றும் அதற்காக ஒத்துழைப்பை வழங்குதல் அவற்றின் செயற்பாடு தொடர்பாக நேரடி கண்காணிப்பு போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது.

### 3.1 இந்த வருடத்தில் செயற்பாடுடைய கூட்டுறவு சம்மேளனங்கள்

| | கூட்டுறவு சம்மேளனத்தின் பெயர் | பதிவு இலக்கம் | பதிவு செய்த திகதி |
|---|---|---|---|
| 01 | வ/து இலங்கை தெங்கு உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்க சம்மேளனம். | சி 1086 | 1942.04.01 |
| 02 | வ/து இலங்கை தேசிய மீனவ கூட்டுறவு சம்மேளனம் | சி 1227 | 1952.02.02 |
| 03 | வ/து இலங்கை தேசிய கூட்டுறவுச் சபை | சி 2490 | 1972.0726 |
| 04 | வ/து இலங்கை கூட்டுறவு சந்தைப்படுத்தல் சம்மேளனம். | சி 2504 | 1973.03.01 |
| 05 | வ/து இலங்கை கூட்டுறவு கைத்தொழில் சம்மேளனம் | சி 2527 | 1974.03.19 |
| 06 | வ/து இலங்கை சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனம் | சி 2651 | 1980.11.10 |
| 07 | வ/து இலங்கை கூட்டுறவு நெசவுக்கைத்தொழில் சம்மேளனம். | சி 2559 | 1981.09.02 |
| 08 | வ/து இலங்கை இளைஞர் சேவைகள் கூட்டுறவுச் சங்க சம்மேளனம் | சி 2689 | 1986.01.01 |
| 09 | வ/து இலங்கை நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனம் | சமு 01 | 1989.09.15 |
| 10 | வ/து இலங்கை கூட்டுறவு கிராமிய வங்கி மகா சம்மேளனம் | சமு 17 | 1997.12.15 |
| 11 | வ/து இலங்கை தேயிலை உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சம்மேளனம் | சமு 29 | 2003.10.07 |
| 12 | வ/து இலங்கை சிக்கனக் கடனுதவி சங்கங்களின் வள முகாமைத்துவ கூட்டுறவு மகா சம்மேளனம் | சமு 30 | 2005.11.21 |
| 13 | வ/து இலங்கை மருத்துவச் சேவை கூட்டுறவுச் சங்க சம்மேளனம் | சமு 33 | 2007.02.23 |

### 3.2 இந்த வருடத்தில் செயற்பாடுடைய கூட்டுறவு சங்கங்கள்

திணைக்களத்தின் மேற்பார்வை / கண்காணிப்பின் மற்றும் வழிநடத்தலின் கீழ் நாடளாவிய ரீதியான 39 ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்கள் 2016 ஆம் ஆண்டினுள் செயற்பட்டது. இக் கூட்டுறவு சங்கங்களை 02 முக்கிய தொகுதியாக வைகப்படுத்த முடியும்

- ❖ நாடளாவிய நிதிச் சேவைகள் கூட்டுறவுச் சங்கங்கள்
- ❖ நாடளாவிய உற்பத்தி மற்றும் ஏனைய சேவைகள் கூட்டுறவுச் சங்கங்கள்.

### 3.2.1 நாடளாவிய நிதிச் சேவைகள் கூட்டுறவுச் சங்கங்கள்

பெரும்பாலான அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் ஊழியர்களை உறுப்பினராக கொண்டு சிக்கன கடனுதவியை செயற்பாட்டை மேற்கொள்ளுகின்ற சங்கங்கள் ஆகும்

இந்த கூட்டுறவு சங்கங்களின் பிரதான செயற்பாடுகள்

1. சங்கத்தில் அங்கத்துவத்தை வகிக்கும் நிறுவன ஊழியர்களின சேமிப்புகளைத் திரட்டுதல்.
2. உறுப்பினர்களுக்கு கடன் வசதிகளை வழங்குதல்
3. அங்கத்துவத்தின் நலன்புரிக்கு வழியமைத்தல்.
   (மரண நிதியுதவி, புலமைப்பரிசில் நிதியுதவி, மருத்துவ நிதியுதவி, நுகர்வு மற்றும் ஏனைய அன்னியோன்ய நிதியுதவி முறை போன்றவற்றை அபிவிருத்தி செய்து பேணுதல்)
4. ஏனைய சேவைகளை வழங்குதல் (மடங்கள், விடுமுறைத் தங்குமிடங்கள், அடகுச் சேவை, அச்சக வசதிகள், காப்புறுதி முகவர் சேவை)

நாடளாவிய ரீதியிலான நிறுவனங்களின் நிதிச் சேவைகள் கூட்டுறவுச் சங்கம். 2016

| | கூட்டுறவு சங்கத்தின் பெயர் | பதிவு இலக்கம் | பதிவு செய்த திகதி |
|---|---|---|---|
| 01 | வ/து சிறைச்சாலைத் திணைக்களத்தின் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம் | சி 473 | 1928.03.15 |
| 02 | வ/து அஞ்சல் மற்றும் தொலைதொடர்பு திணைக்களத்தின் பணியாளர்களின் கூ.ட்டுறவு வங்கி சங்கம். | சி 503 | 1928.12.07 |
| 03 | வ/து கல்வித் துறைசார் பணியாளர்களின் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம் | சி 736 | 1930.11.01 |
| 04 | வ/து இலங்கை சுகாதார சேவை பணியாளர்களின் அபிவிருத்தி சேவை சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம். | சி 744 | 1930.11.10 |
| 05 | வ/து சுகாதாரத் திணைக்களத்தின் பணியாளர்களின் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம். | சி 290 | 1938.03.30 |
| 06 | வ/து இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்களின் சிக்கன கடனுதவி மற்றும் நலன்புரி கூட்டுறவு சங்கம். | சி 303 | 1938.04.28 |
| 07 | வ/து பதிவாளர் நாயகத்தின் திணைக்கள பணியாளர்களின் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம் | சி 255 | 1939.10.20 |
| 08 | வ/து துறைமுக அதிகார சபை ஊழியர்களின் நலன்புரி சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம | சி 1046 | 1943.11.23 |
| 09 | வ/து புகையிரத அதிபர் மற்றும் எழுதுவினைஞர்களின் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம் | சி 1649 | 1949.03.29 |
| 10 | வ/ து புகையிரத பாதை வேலை திணைக்களத்தின் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம் | சி 1707 | 1950.08.30 |

| | | | |
|---|---|---|---|
| 11 | வ/து சுகாதாரசேவை நிதி மற்றும் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம். | சி 2233 | 1959.11.19 |
| 12 | வ/து இ.போ.ச. ஊழியர்களின் சிக்கன கடனுதவி மற்றும் நலன்புரி கூட்டுறவு சங்கம் | கே.ஈ. 299 | 1960.05.26 |
| 13 | வ/து மக்கள் வங்கி பணியாளர்களின் கூட்டுறவு சங்கம் | சி 2266 | 1962.02.10 |
| 14 | வ/து அரச சேவையில் உள்ளவர்களின் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம் | சி 326 | 1962.02.10 |
| 15 | வ/து சதொச பணியாளர்களின் சிக்கன கடனுதவி மற்றும் நலன்புரி கூட்டுறவு சங்கம் | சி 2294 | 1963.01.26 |
| 16 | வ/து கூட்டுறவு திணைக்களத்தின் அதிகாரிகள்தரத்திலான உத்தியோகத்தர்களின் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம் | சி 2357 | 1962.10.26 |
| 17 | வ/து பிரவுண்ஸ் குடும்ப தொழிநுட்ப மற்றும் பொதுச் சேவைகள் சிக்கன கடனுதவி மற்றும் கூட்டுறவு சங்கம் | சி 2383 | 1967.10.01 |
| 18 | வ/து அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் சிக்கன கடனுதவி மற்றும் கூட்டுறவு சங்கம் | சி 2402 | 1968.08.29 |
| 19 | வ/து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பணியாளர்களின் சிக்கன கடனுதவி மற்றும் கூட்டுறவு சங்கம் | சி 931 | 1973.07.25 |
| 20 | வ/து துறைமுக அதிகார சபை ஊழியர்களின் கூட்டுறவு வங்கி சங்கம் | சமு 02 | 1989.12.20 |
| 21 | வ/து நிலஅளவை திணைக்களத்தின நில அளவை உதவியாளர்களின் சிக்கன கடனுதவி மற்றும் நலன்புரி கூட்டுறவு சங்கம் | சமு 10 | 1994.02.09 |
| 22 | வ/து இலங்கையின் மகளிர்களுக்கான அபிவிருத்தி சேவைகள் கூட்டுறவுச் சங்கம். | சமு 18 | 1998.04.06 |
| 23 | வ/து சணச அபிவிருத்தி வங்கி ஊழியர்களின் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம். | சமு 22 | 2000.06.26 |
| 24 | வ/து சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் கமத்தொழில் பரிசோதனை உதவியாளர்களின் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம். | சமு 25 | 2001.05.05 |
| 25 | வ/து நீர் வழங்கள் சபையின் ஒருமித்த ஊழியர்கள் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம். | சமு 31 | 2006.01.03 |
| 26 | வ/து அரச சேவை பட்டதாரிகளின் சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம். | சமு 32 | 2006.11.29 |
| 27 | வ/து பிரஜாசக்தி இளைஞர்கள் வலுவுட்டல் கூட்டுறவு சங்கம் | சமு 43 | 2014.10.02 |
| 28 | வ/து இலங்கை அரச முகாமைத்துவ உதவியாளர்களின் சேவையில் உள்ளவர்களின் சிக்கன கடனுதவி மற்றும் அபிவிருத்தி சேவைகள் கூட்டுறவு சங்கம் | சமு 44 | 2014.08.12 |

3.2.2 நாடளாவிய ரீதியிலான உற்பத்தி மற்றும் ஏனைய சேவை வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள்.

நுகர்வோரின் தேவைக்கேற்பவும் அவசியமான உற்பத்தி மற்றும் சேவைகளை வழங்கும் ஆரம்ப கூட்டுறவு சங்கங்கள் நாடளாவிய ரீதியிலான உற்பத்தி மற்றும் ஏனைய சேவை வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களாக அடையளம் காணபட்டுள்ளது

இந்த கூட்டுறவு சங்கங்களின் பிரதான செயற்பாடுகள்

- ❖ உறுப்பினர்களின் உற்பத்திகளை கொள்வனவு செய்தல்
- ❖ உற்பத்திகள் மற்றும் சேவை வழங்கல் தெடர்பான அங்கத்துவர்களுக்கு தேவையான மூலப்பொருட்களை வழங்குதல்
- ❖ உறுப்பினர்களின் உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பை அறிமுகம் செய்தல் சந்தைவாய்ப்பை விரிவுபடுத்தல்
- ❖ உறுப்பினர்களிற்கான தொழில் நுட்பமேம்பாடு மற்றும் புதிய தொழில் நுட்பத்தை அறிமுகம் செய்தல்

| | கூட்டுறவு சங்கத்தின் பெயர் | பதிவு இலக்கம் | பதிவு செய்த திகதி |
|---|---|---|---|
| 01 | வ/து அகில இலங்கை அச்சக உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம். | சி 2280 | 1962.08.10 |
| 02 | வ/து அகில இலங்கை விசிதிரப்பயிர்கள் தொங்கு பயிர் கூட்டுறவுச் சங்கம் | சி 2409 | 1969.11.28 |
| 03 | வ/து அகில இலங்கை அப்பியாக புத்தக உற்பத்தியாளாகள் கூட்டுறவுச் சங்கம் | சமு 03 | 1990.03.07 |
| 04 | வ/து இலங்கை இழுவலை உரிமையாளர்களின் கூட்டுறவுச் சங்கம் | சமு 07 | 1992.01.29 |
| 05 | வ/து தோட்டத் தொழிலாளர்களின் வீடமைப்பு சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம். | சமு 28 | 2003.07.11 |
| 06 | வ/து அகில இலங்கை சிறிய மற்றும் மத்தியஅளவிலான விதைகள் களஞ்சிய முயற்சியாண்மையாளர்களின் அபிவிருதத்திக் கூட்டுறவுச் சங்கம். | சமு 34 | 2007.03.07 |
| 07 | வ/து அகில இலங்கை விவசாய கூட்டுறவுச் சங்கம் | சமு 41 | 2010.01.05 |
| 08 | வ/து இலங்கை துறைமுக கப்பல் சேவை வழங்கும் கூட்டுறவுச் சங்கம் | சமு 36 | 2011.07.07 |
| 09 | வ/து வீடமைப்பு மற்றும் ஆதன அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | சமு 39 | 2011.07.07 |
| 10 | வ/து ரஜரட்ட பல்கலைக்கழக கூட்டுறவு சங்கம் | சமு 40 | 2011.08.28 |
| 11 | வ/து பால் உற்பத்தியாளர்களின் தேசிய கூட்டுறவு சங்கம் | சமு 45 | 2014.10.02 |

**කර්මාන්ත හා වාණිජ කටයුතු අමාත්‍යාංශය**

**සමුපකාර සංවර්ධන දෙපාර්තමේන්තුව**

දුරː 0112-478374, 0112-478375  ෆැක්ස් : 0112-478386

වෙබ් : www.coop.gov.lk  ඊ-මේල්ː dcoopdev@sltnet.lk